Bharatiya Vidya Bhavan BULLETIN

VOLUME XXVIII No. 10 COIMBATORE KENDRA NOVEMBER 2019

**Dear reader,**

This month's personality is the great industrial pioneer and staunch Gandhian Sri Jamnalal Bajaj. We have carried an article on the passionate farmer, politician and social reformer — Sri Vellingiri Gounder in this issue, who has done yeoman service to the residents of Coimbatore. Bhavan's Faculty of Fine Arts conducted its annual day and the arangetram of its students who are completing their course. We are carrying photos and reports of the event. The useful and interesting programmes at both the schools have been included as also the usual thought-provoking articles.

Wish you happy reading!

The editorial board

## PERSONALITY OF THE MONTH
## JAMNALAL BAJAJ



*04.11.1889 – 11.02.1942*

Humanitarian, freedom fighter, philanthropist, industrialist, social reformer and a devoted Mahatma Gandhi follower, Jamnalal Bajaj was like a son to Gandhiji.

Jamnalal Bajaj was born in 1898, into a poor Marwari family, as the third son of Kaniram and Birdibai, in a village named Kashi Ka Bas, near Sikar, Rajasthan. He was later adopted as a grandson by Seth Bachhraj, a well-known and respected trader in the British Raj. Under the guidance of his adopted grandfather, he acquired the skills of a tradesman. In 1926, he founded what would become the Bajaj group of industries.

Upon Mahatma Gandhi's return from South Africa, Jamnalal took interest in Gandhi's way of life and his principles. He gave up the title 'Rai Bahadur' conferred on him by the British government and joined the non-co-operation movement in 1921. He also participated in the Nagpur Jhanda Satyagraha in 1923, the Boycott of Simon Commission in 1929, the Salt Satyagraha in 1930, and the Anti war campaign in 1941.

As an industrialist and a businessman, Jamnalalji was singular in enunciating for himself a strict code of ethics. He earnestly tried to practise the Gandhian ethic in every sphere of his life – political, social, business and personal. This was not an easy task. In spite of being a 'Merchant Prince', he suffered protracted jail terms preferring a 'C' class prisoner status and lived a lower middle class life.

Establishment of Mahila Ashram at Wardha and Mahila Shiksha Sadan in Ajmer are living testimonies of his earnest endeavours for women emancipation through education. But, it was in implementing the Constructive Programme of Gandhiji that Jamnalalji overreached himself. As the Founder-President of the 'Gandhi Seva Sangh' and Chairman of the 'All-India Khaddar Board', he undertook extensive khadi tours all over the country. Later, he was elected a member of the Congress Working Committee and the treasurer of Congress in1933.

Jamanalal Bajaj was interested in initiatives such as the removal of untouchability and the promotion of Hindi, Khadi and village Industries. In 1925, he was chosen treasurer of the All India Spinners

Truth is ever to be found in simplicity, and not in the multiplicity and confusion of things.
- Isaac Newton




Association. He was also the president of the All India Hindi Sahitya Sammelan (literary convention) that promoted Hindi as the single language to unite all Indians. He was instrumental in publishing Hindi magazines and books. He initiated the Gandhi Hindi Pustak Bhandar (bookshop) in Bombay and started the Sasta Sahitya Mandal (publishing house). Bajaj founded the Dakshin Bharat Hindi Prachar Sabha (university) along with C. Rajagopalachari with the hope of spreading the learning of Hindi across the country.

Jamnalalji was a social reformer who walked his talk. He abolished purdah in his own home and opened the doors of his family-owned temple — The Laxmi Narayan Mandir, in Wardha, for the Harijans in 1928 (the first temple in India to do so). He began a campaign by eating a meal with Harijans and opening public wells to them.

He was elected chief of the Jaipur Rajya Praja Mandal in 1938. During this period, he negotiated a truce between the maharajas of Sikar and Jaipur.

When the Congress Working Committee informally decided to make him the President of the Haripura Session of the Congress which Gandhi personally approved, he chose to pass the honour to Subhas Chandra Bose.

Jamanalal dedicated much of his wealth to the poor, in line with the trusteeship concept proposed by Gandhi.

He interacted with great saints like Maharshi Ramanar, Sri Aurobindo, Mata Anandmayee and Sant Tukdoji.

Jamnalal Bajaj, who gave of himself completely to the freedom movement - mind, body and soul, is remembered for his sheer earnestness, single-minded commitment and his ability to convert words into deeds.

It was in fitness to the stature of Jamnalalji that the Government of India honoured his memory by releasing a commemorative postal stamp in 1970 and celebrated his Birth Centenary Year in 1990.

*Sources : https://en.wikipedia.org/wiki/Jamnalal_Bajaj*
*http://www.jamnalalbajajfoundation.org/jamnalalbajaj/about*

## TRIBUTE
## Smt. V. NANAMMAL


*(1920 – 2019)*

Affectionatly called 'Yoga paatti', V. Nanammal died on October 26, 2019. She was just a few months away from turning 100. Born into an agricultural family in Zamin Kaliapuram near Pollachi, Nanammal was taught yoga by her father.

Credited as India's oldest yoga teacher, she had trained thousands of students over the years and had groomed more than 600 yoga instructors, including 36 from her own family. The instructors she groomed have gone on to teach yoga in several countries. Along with her son V. Balakrishnan, she had been running the Ozone Yoga Centre in Bharathi Nagar in Ganapathy since 1971.

Till recently, she had been busy touring different countries and giving lec- dems on yoga. Her memory, eyesight and hearing were sharp till the end, thanks to her regular practice of Shirasasana. Nanammal used to enliven her classes with tips on home remedies for common ailments.

Nanammal had been honoured with 150 awards, six national-level gold medals and the Yoga Ratna award of the Government of Karnataka in 2014. She also won India's National Nari Shakti Puraskar in 2016 and was awarded the country's fourth highest civilian award — the Padma Shri in 2018.

Bharatiya Vidya Bhavan's Coimbatorte Kendra offers its respects to the spirited lady, who was an inspiration to many — young and old.

We all have dreams. But in order to make dreams come into reality, it takes an awful lot of determination, dedication, self-discipline, and effort. *- Jesse Owens*

# FACULTY OF FINE ARTS ANNUAL DAY AND ARANGETRAM 2019

Coimbatore Bharatiya Vidya Bhavan's Faculty of Fine Arts conducted its Annual Day and Bharatanatyam Arangetram on 17th and 18th October respectively. On the opening day, the function commenced with invocatory songs rendered by the students of the one-year Vocal Music Certificate course. After the welcome address and presentation of the annual report by the Director of the Faculty of Fine Arts Dr. (Smt.) Usha Rajaram, Chairman Shri B. K. Krishnaraj Vannavarayar addressed the gathering and honoured the Gurus — Shri V. Sivakumar and Smt. V. Bagyalakshmy (Vocal Music), Ambattur Shri K. Babu (Mridangam) and Shri J. Prabhu Ram (Veena). The Final year vocal music students presented their performance with the compositions of Tyagaraja, Dikshitar, Shyama Shastri and Swathi Thirunal. Thani Avarthanam in Adhi talam was performed by the final-year mridangam students, followed by a brief veena recital by the students. Prizes and certificates were presented by Joint Secretary Shri C. R. Suryanarayan to the top-ranking students.

On October 18th, six students of the final-year Bharatanatyam course presented their arangetram with a complete Margam before a large gathering. Shri V. Prabhakar Rao, former Global Vice President, Siemens Medical Division, Singapore was the chief guest. The program was conducted by Guru Smt. Sherin George.




*Vocal performance by the final year diploma students*



*Veena performance by first year diploma students*




*Vocal music by the Certificate course students*



*Arangetram of the final year bharatanatyam students*



*Final year diploma students with the chief guest and other dignitaries*



*Section of the Audience*

## HUMAN EXCELLENCE ORIENTATION SESSION - 5.10.19



*Smt.B.Ramadevi addresses the students*

Smt.B.Ramadevi, retired teacher of English conducted separate sessions on 'Creative Writing' for the students of R.S.Puram and Ajjanur. She gave various tips for putting down one's thoughts creatively and stressed that students should devote at least half an hour a day to read books other than their textbooks. She suggested that each class can have a magazine in which the original works of the students can be included.

## THE 150TH BIRTH ANNIVERSARY OF THE MAHATMA - 3.10.2019



*A few models of the charkha, prepared by students*

The 150th birth anniversary of Mahatma Gandhi was celebrated on 3rd October 2019. There were speeches in English, Tamil and Hindi on the ideals of Gandhi, his contribution towards freedom and his principle - Satyameva Jayathe! The choir rendered heartwarming Bhajans. An oath was administered by the Principal on service to society through truth and non-violence. Models of the charkha, prepared by students were exhibited.

## NAVARATHRI KOLU

Navarathri is celebrated every year at R S Puram with involvement and devotion. This year, too, the kolu had dolls representing the various aspects of creation. Children visited the kolu and learnt about the unique aspect of our tradition that blends beauty with devotion. They also presented bhajans and music.



## BHAJAN COMPETITION WINNERS - 11.10.2019

Namasankeerthana trust conducted a district level Bhajan competition on 11.10.19 at Ayyapan Puja Sangam, Ramnagar, Coimbatore. Students from reputed schools with a strong base in our culture and tradition participated with great zeal. The students from R S Puram B V B came out winners with their energetic and vibrant performance.




*Jubilant students hold aloft the trophy.*

## GANDHI JAYANTHI - 2.10.2019



*The choir presents the bhajans as the dignitaries look on*

The Gandhi Jayanthi celebration was presided over by Chairman Shri.B.K.Krishnaraj Vanavarayar. In his address, he stressed the need for knowing about great leaders like Swami Vivekananda and Gandhiji. The programme began with a prayer by the choir students. It comprised speeches in English and Tamil, a key board presentation, a poem on Bapu's message, a flute performance and rendering of the bhajans. The 'Villuppattu' presentation on Gandhiji's life was the highlight of the programme. A former student presented a poem in Tamil. The programme came to an end with floral tributes to the image of the Mahatma.

## SEED BALL PREPARATION




Three students from Ajjanur school participated in the Seed Ball Preparation programme organized by L & T and Isha organisation at Ashokapuram Hr.Sec.School on 5th October, 2019.

## ENGLISH OLYMPIAD



English Olympiad was conducted on 15th October 2019.31 students from classes VI to IX participated in the Olympiad.

## MAILS DAY - 15.10.2019



*Students listen to the explanation by the officer*

15th of October is earmarked as “Mails day”. The students of class VIII along with their class teachers visited the R M S office (Railway Mail Service) near Coimbatore Railway station on that day and learnt about the processing of letters stage by stage from posting to the delivery point. All the students were given an inland letter and asked to write a letter to their friends/ relatives.

Indeed, this life is a test. It is a test of many things - of our convictions and priorities, our faith and our faithfulness, our patience and our resilience, and in the end, our ultimate desires. *- Sheri L. Dew*

# SHIKSHAN BHARATI COMMENDATION CERTIFICATES

Bhavan's Shikshan Bharati Commendation Certificates were distributed to meritorious students who secured 90% and above marks in all the five subjects in the SSLC Public Examinations held in March 2019.



# NAVARATHIRI KOLU



*A student performs bharatanatyam in front of the kolu*

The auspicious nine-day Navaratri festival began with great fervour at BVB, Ajjanur on 29th September, 2019. Students from K.G classes to XII visited the kolu everyday to seek the blessings of the Almighty. Students propitiated the deities with devotional songs and bharatanatyam performances. Prasadham was distributed at the end of each day's programme.

# VIJAYADASHAMI

On Vijayadashami day, the school conducted 'Vidyarambham' for the fresh beginners with a special puja to Lord Ganesha, Goddess Lakshmi and Goddess Saraswathi. Pre K.G. children were helped to write the letter 'Ohm' and 'அ' on the paddy. Music and dance performances were presented by the 'Fine Arts' students. Later, students offered their respects to their gurus.



*Tiny tots write their first letters on the paddy*

# கோவை மையத்தின் 170 வது சிந்தனை அரங்கம்

கோவை பாரதீய வித்யா பவனம் நடத்தி வரும் சிந்தனை அரங்கத்தின் 170வது கூட்டம் பவன் வளாகத்தின் கருத்தரங்க அறையில் 26.09.2019 அன்று நடைபெற்றது. அவ்வமயம் ஜனனோம் நிறுவனத்தலைவர் பேராசிரியர் பி. எம். முரளி அவர்கள் 'உடம்புள்ளே இருக்கும் நுண்ணுயிரி' என்ற தலைப்பில் உரையாற்றினார்.



பேராசிரியர் பி. எம். முரளி அவர்கள் உரையாற்றுகிறார்

# CHOICE IS YOURS — HONEYBEE OR A FLY?



A honeybee flies from flower to flower, extracting only the nectar without disturbing the flower. The mindset of a honeybee is to seek the essence of each flower, even in a place filled with garbage. Instead of giving its attention to all the filth, it keeps its focus on finding the nectar.

In our relationships, we have much to learn from the honeybee. It teaches us the art of focusing on the positives and dealing appropriately with the faults in each other. Just as the honey bee seeks nectar even in the most unexpected of places, we can aim to seek the positive qualities in those around us.

On the other hand, the housefly ignores the sweet fragrance of the rose gardens and focuses on garbage and trash. It looks for filth even in the tidiest of places. This represents the mindset of those who ignore the good qualities in those around them and focus on their faults.



It is so easy to see the faults and flaws in others. Fault finding is a habit. The more we give in to it, the more we become obsessed by it. In relationships, it is important to have honest communication that focusses on appreciating the positives while dealing with the negatives in a gracious and constructive manner.

The choice — whether to be a Fly or a Honeybee, is entirely yours. Positive attitude or negative? You decide.

*Source:https://starofmysore.com/choice-is-yours-honeybee-or-a-fly/*


## பாரதீய வித்யா பவன்

### கோவை மையம்

### விருதுகள் வழங்கும் விழா

**தமிழ் மாமணி**
விருது பெறுபவர்
முனைவர் **கா. அரங்கசாமி** அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு) மற்றும் எழுத்தாளர்

**தமிழ்ப்பணிச் செம்மல்**
விருது பெறுபவர்
திரு. **நா. நஞ்சுண்டன்** அவர்கள்
செயலர், கம்பன் கழகம், கோவை

**வாழ்த்துரை**
தமிழ் மாமணி
முனைவர் **சிற்பி பாலசுப்பிரமணியம்** அவர்கள்
மேனாள் தமிழ்த்துறைத்தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை
மற்றும் பவன் நிரவாகக்குழு உறுப்பினர்

நாள் : நவம்பர் 30, 2019 (சனிக்கிழமை) ✦ நேரம் : காலை 10.00 மணி
இடம் : பவன் வளாகம், ஆர்.எஸ்.புரம், கோவை

இவ்வினிய விழாவிற்கு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர்
தலைவர்


Every day we have plenty of opportunities to get angry, stressed or offended. But what you're doing when you indulge these negative emotions is giving something outside yourself power over your happiness. You can choose to not let little things upset you.
*- Joel Osteen*

Happiness cannot be travelled to, owned, earned, worn or consumed. Happiness is the spiritual experience of living every minute with love, grace, and gratitude.
*- Denis Waitley*

# வெள்ளிங்கிரி கவுண்டர்



(1880 – 1948)

'பதவி' என்பது பிறருக்கு உதவி செய்வதற்குப் பயன் படும் மிகப்பெரிய கருவி என்றால், இன்றைய கால கட்டத்தில் மக்கள் அதை நகைச்சுவை என்று கூட எண்ணக்கூடும். ஆனால், தான் வகித்த பதவிகள் மூலம் மக்களுக்கு எண்ணிலடங்காத சேவை செய்து, தான் வாழ்ந்த நகரத்தைப் பல வகையிலும் மேம்படுத்தி, மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்ற சான்றோரில் ஒருவர் தான் வெள்ளிங்கிரி கவுண்டர் அவர்கள்.

வி. சி. வெள்ளிங்கிரி கவுண்டர் அவர்கள் 1880 ஆண்டு கோவை மாவட்டத்தில் உள்ள வெள்ளக்கிணறு என்னும் ஊரில் செல்வச்செழிப்பு மிக்க விவசாயக் குடும்பத்தில் தலைமகனாகப் பிறந்தார். அவருடைய தந்தையார் சின்னப்ப கவுண்டர் அவர் பள்ளிப்படிப்பு படித்துக்கொண்டிருக்கும் போதே காலமாகி விட்டதால், தனது 22ம் வயதிலிருந்தே குடும்பப் பொறுப்பைச் சுமக்கத் தொடங்கினார்.

நல்ல உயரமும், கம்பீரமான தோற்றமும் கொண்ட அவர் தன் கொள்கையில் உறுதியாக இருப்பவராக மட்டும் இல்லாமல், தனது எதிராளியின் பக்கத்து நியாயத்தையும் உடனே புரிந்து கொண்டு செயல் படுபவராயிருந்தார். மிகுந்த தெய்வ பக்தி உடைய அவர் பிறருக்கு ஏதாவது உதவி தேவை என்றால், யார் என்று பார்க்காமல் உதவி செய்யத்தயாராக இருப்பார்.

இவர் 1921ல் கோவையில் முதல் சட்ட மன்றத்தேர்தலிலும், 1932ல் இந்திய மாநில சபைத்தேர்தலிலும் வெற்றி பெற்றார். இந்தக்கால கட்டத்தில் கால் நடை வளர்ச்சி வாரியத்திலும், மத்தியப் பருத்திக் குழுவிலும் அங்கம் வகித்த இவர், விவசாயத்தையும் கால் நடை வளர்ப்பையும் சீர்திருத்தப் பல நடவடிக்கைகள் எடுத்தார். கவுண்டர் அவர்கள் திரு. டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் அவர்களுடன் இணைந்து கோயமுத்தூர் விவசாய சங்கம் (Coimbatore Agricultural Association ) என்ற அமைப்பைத் தொடங்கி, அதன் பொருளாளராகவும் செயல்பட்டார். கோவைப்பகுதியில் விவசாயத்தை நவீனமயமாக்கியதில் இவருக்குப் பெரிய பங்கு உண்டு. டிராக்டரை உபயோகப்படுத்தி நிலத்தை உழுவது, மின்சாரப்பம்பு செட்டின் உதவியுடன் நீர் பாய்ச்சுவது போன்ற புதிய முறைகளை அறிமுகப்படுத்தினார்.

விவசாயம் மட்டுமே விவசாயிகளின் பொருளாதாரத்தையும் சமூக அந்தஸ்தையும் உயர்த்தாது என்பதை உணர்ந்த அவர் விவசாய சம்பந்தப்பட்ட பிற தொழில்களைத் தொடங்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் பருத்தி விவசாயிகளுக்கு உதவும் விதமாக ஒரு ஜின்னிங் ஃபாக்டரி, ஞானாம்பிகா நூற்பாலை, கரும்பு விளைவிப்போரின் நன்மைக்காக ஒரு கூட்டுறவு சங்கம், போத்தனூரில் ஒரு சர்க்கரை ஆலை ஆகியவற்றைத் துவக்கினார்.

கல்வி வளர்ச்சியிலும் கவுண்டர் அவர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். ஸ்ரீராமக்ருஷ்ண வித்தியாலயம் துவங்கியதில் இருந்தே அந்த நிறுவனத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். வித்தியாலயத்துக்காக மேட்டுப்பாளையம் ரோட்டில் துடியலூரில் பண்ணை வீட்டுடன் 4 ஏக்கர் நிலம் தானமாக அளித்ததன்றி, கணிசமான தொகையையும் வழங்கினார்.

1933 ல் இருந்து 1937 வரை மாவட்ட வாரியத் தலைவராக இருந்த போது கோவையில் பல இடங்களில் பள்ளிகளைத் துவக்கி நடத்தியதோடு மட்டுமன்றி, ஆரம்பப்பள்ளிகளை உயர் நிலைப்பள்ளிகளாக உயர்த்தவும் செய்தார். அநேக இடங்களில் வாசகசாலைகளை ஏற்படுத்தி மக்களிடையே வாசிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தினார். 1923 ம் ஆண்டில் இருந்து ஏழ்மை நிலையில் இருந்த உயர் நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 100/ உதவித்தொகை அளிக்கும் திட்டத்தைத் துவக்கி, தனது இறுதிக்காலம் வரை தொடர்ந்து நடத்தினார்.

அப்போது ரயில்வேயின் நிர்வாகம் மாவட்ட வாரியத்திடம் இருந்தது. அதன் தலைவராக இருந்த கவுண்டர் அவர்கள் கோவைக்கும் பொள்ளாச்சிக்கும் இடையே ரயில் தொடர்பைக்கொண்டு வந்தார். சத்தியமங்கலம் – திம்பம் – மைசூர் சாலையை அகலப்படுத்தி அதற்குப்பாதுகாப்பான தடுப்புச்சுவர் எழுப்பியது, மேட்டுப்பாளையத்துக்கும், அதன் சுற்றியுள்ள பகுதிகளுக்கும், பாதுகாப்பான குடி நீர் வினியோகத்துக்கு ஏற்பாடு செய்தது, கிராமப்புறங்களில் சந்தைகளை அமைத்து விவசாயிகளுக்கு உதவி செய்தது, மாவட்ட காச நோய் நிவாரணக்குழுவின் உதவித்தலைவராக இருந்து, மக்களை இந்த நோயில் இருந்து காத்தது – போன்று, மக்களின் தேவையை உணர்ந்து மிகுந்த மனிதாபிமானத்துடன் பலவிதமாக செயலாற்றினார்.

பல வகையான சமூக சீர்திருத்தங்களையும் கவுண்டர் அவர்கள் செய்துள்ளார். ஆடம்பரமான திருமணங்கள், குழந்தைத்திருமணங்கள், மிகவும் நெருங்கிய உறவினரிடையே நடைபெறும் திருமணங்கள் ஆகியவற்றைத் தடுக்க முயற்சிகள் செய்தார். தீண்டாமை ஒழிப்பிலும் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திலும் தீவிரம் காட்டிய இவர், பஞ்சாயத்துத் தலைவராக இருந்த போது, அனைத்துத்தர மக்களின் வீட்டு நிகழ்ச்சிகளுக்குப் போவதை வழக்கமாகக்கொண்டிருந்தார். மது ஒழிப்பில் தீவிர நம்பிக்கை கொண்ட இவர் தனது தென்னந்தோப்புகளில் கள் இறக்குவதைத் தடை செய்தார். கவுண்டர் அவர்கள் தனது பேச்சுத்திறமையால், மக்களைத் தன் கருத்துக்கு உடன்பட வைக்கும் திறமையைப் படைத்திருந்தார். பல வேறு விஷயங்களைப்பற்றி இவர் ஆற்றியுள்ள தொலை நோக்குப்பார்வை மிகுந்த உரைகள், நல்ல கருத்துக்களும், நகைச்சுவையும் நிறைந்தவை.

இந்த வையகத்தில் 'வாழ்வாங்கு' வாழ்ந்த வி. சி. வெள்ளிங்கிரி கவுண்டர் அவர்கள் 1948ம் ஆண்டு இறைவன் அடி சேர்ந்தார்.

*Source: https://simplicity.in/articledetail.php?aid=948*

திருடர்களால் திருடப்படாததும், சகோதரர்களுடன் பங்கிட முடியாததும், பாரமே இல்லாததும், செலவழிக்க செலவழிக்க அதிகரித்துக்கொண்டே போவதுமான கல்வி தான் செல்வங்களிலேயே தலை சிறந்தது.

– சுபாஷிதம்

# நன்றியுணர்வின் சக்தி!



ஒரு சிறிய பறவை ஒரு பாலைவனத்தில் வாழ்ந்து வந்தது. அது அப்பாலை வனத்தின் வெப்பத்தால் தன் உடலிறகுகள் அனைத்தையும் இழந்து உண்ணவும், பருகவும் எதுவுமின்றித் தவித்துக் கொண்டிருந்தது. தங்குவதற்கு ஒரு கூடு கூட இன்றித் தன் வாழ்வைச் சபித்த வண்ணம் வாழ்ந்து வந்தது.

ஒரு நாள் ஒரு வான தூதர் அப்பாலை நிலத்தைக் கடந்து செல்வதைக் கண்ட அப்பறவை அவரிடம், "எங்கு செல்கிறீர்கள்?" என்று கேட்டது. "இறைவனைச் சந்திக்கச் செல்கின்றேன்" என்று அவரும் பதில் கூறினர். உடனே அப்பறவை, "என் துன்பங்கள் எப்போது முடிவுறும் என்று இறைவனைக் கேட்டு வாருங்கள்" என்று அவரை வேண்டிக்கொண்டது.

"கண்டிப்பாகக் கேட்டுச் சொல்கிறேன்" என்று வான தூதர் கூறிச் சென்றார்.

இறைவனை அடைந்த அத்தூதர் இறைவனிடம் அப்பறவையின் பரிதாப நிலையை விளக்கிக் கூறி எப்பொழுது அதன் துன்பம் முடிவுறும் என்று கேட்டார்.

"இன்னும் ஏழு பிறவிகள் அப்பறவை அது அனுபவிக்கும் துன்பத்தை அனுபவித்தாக வேண்டும். அதுவரை அப்பறவைக்கு எவ்வித இன்பமும் இல்லை" என்று இறைவன் பதில் கூறினார்.

இதைக்கேட்டால் ஏற்கெனவே சோர்வுற்றிருக்கும் அப்பறவை மேலும் மனமொடிந்து போய் விடுமே என்றெண்ணிய வான தூதர், "இதற்கொரு நல்ல தீர்வைக் கூறுங்கள் ப்ரபோ" என்று இறைவனைப் பணிந்து வேண்டினார்.

இறைவன் மனமிரங்கி ஒரு மந்திரத்தை உபதேசித்து, அதைத் திரும்பத் திரும்பக் கூறினால் நன்மை விளையும் என்று சொன்னார். "இறைவா, நீர் அளித்துள்ள அனைத்திற்கும் நன்றி" என்பதுவே அந்த மாமந்திரம்.

இறைவன் கற்பித்த மந்திரத்தை வானதூதரும் அப்பறவைக்கு உபதேசித்து விட்டு, அங்கிருந்து சென்று விட்டார்.

ஏழு நாட்களுக்குப் பின் அந்த வான தூதர் மீண்டும் அப்பாலை நிலத்தைக் கடந்து சென்ற போது, அந்தப் பறவை மிகுந்த ஆனந்தத்துடன் இருப்பதைக் கண்டார். அதன் உடலில் இறகுகள் முளைத்திருந்தன. அப்பாலை நிலத்தில் ஒரு சிறு செடி முளைத்திருந்தது. ஒரு சிறிய நீர்நிலையும் அங்கு உண்டாகியிருந்தது. ஆனந்தத்துடன் அங்குமிங்கும் மகிழ்வுடன் அப்பறவை அலைந்து திரிந்து கொண்டிருந்தது.

வான தூதருக்கோ மகா ஆச்சர்யம்! ஏழு பிறவிகளுக்கு இன்பமே இல்லையென இறைவன் கூறினாரே!! இன்றெப்படி இது சாத்தியமென எண்ணி, அதே கேள்வியுடன் இறைவனைப் பார்க்கச் சென்றார்.

இறைவனிடம் அந்தக் கேள்வியைக் கேட்ட போது, "ஆம். ஏழு பிறவிகளுக்கு அப்பறவைக்கு எவ்வித மகிழ்வும் இல்லையென்ற விதி இருந்தது உண்மைதான். ஆனால், "இறைவா, நீர் அளித்த அனைத்திற்கும் நன்றி" என்ற மந்திரத்தை அப்பறவை எல்லாச் சூழலிலும் மாறி மாறி ஜெபித்ததால் நிலைமை மாறியது. பாலையின் சுடுமணலில் விழுந்த போது நன்றி சொன்னது. வெப்பத்தில் வருந்தி பறக்க முடியாது தவித்த போதும் நன்றி சொன்னது. சூழல் எதுவாயினும் நன்றி சொன்னது. எனவே ஏழு பிறவியின் ஊழ்வினைப் பயன் ஏழு நாட்களில் கரைந்து மறைந்தது." என்று இறைவன் பதில் கூறினார்.

நாமும் அந்த மாமந்திரத்தை நம் வாழ்வில் உபயோகிப்போம். நாம் சந்திக்கும் எல்லா சூழல்களிலும், "இறைவா, நீர் அளித்துள்ள அனைத்திற்கும் நன்றி" என்று உளமாரக் கூற ஆரம்பிப்போம்.

உதாரணமாக, நமக்குத் தலை வலித்தது எனில் நம் உடலின் வேறு பாகங்கள் அனைத்தும் வலியின்றி ஆரோக்கியமாக இருப்பதற்கு நன்றி கூறுவோம். அப்பொழுது நம் தலைவலியியால் ஏற்படும் துன்பம் குறைந்து விடும். நம் உறவுகள், பொருளாதாரம், அன்பு வாழ்வு, சமுதாய வாழ்வு, வியாபாரம், நண்பர்கள், வேலையாட்கள், உடன் பணியாற்றுவோர் .... என்று, நம் சூழ்நிலைகள் அனைத்திலும், 'நன்றி', 'நன்றி', என்று எல்லா நேரங்களிலும் உளமாரக் கூறுவோம்.

சில நாட்களிலேயே நன்றியுணர்வை ஊட்டும் ஒரு எளிய வார்த்தை, ஒரு எளிய சிந்தனை நமது ஊழ்வினையின் பாரத்தைக் கரைத்து மறையச் செய்யும் சக்தியுடையதாக இருகின்றது என்பதை உணர்ந்து கொள்வோம். இந்த மாமந்திரத்தைத் தொடர்ந்து மனதினுள் உச்சரித்து வருவோமெனில், வாழ்வில் மாற்றங்களை உருவாக்கி மகிழ்வோம்.

Source: http://eegarai.darkbb.com/t147247-topic?theme_id=135159

# கி.வ.ஜ வின் நகைச்சுவை



கி. வ. ஜகந்நாதன் அவர்கள் 'வாகீச கலாநிதி' என்று போற்றப்பட்டவர். எந்தச் சூழ் நிலையிலும், நகைச்சுவையாகப் பேசுவது அவருக்கு இயற்கையாக வந்த கலை. அவ்வாறு, யோசிக்காமலேயே, சட்டென்று அவர் உதிர்த்த நகைச்சுவை மணிகளில் சில:

இம்மை – மறுமை

கி.வா.ஜ அவர்கள் ஒரு கூட்டத்தில் 'இம்மை – மறுமை' என்ற தலைப்பில் பேச அழைக்கப்பட்டிருந்தார். அவர் உரையாற்ற ஆரம்பித்ததும் மைக் கோளாறாகி விட்டது. அதை அகற்றி விட்டு வேறு மைக் வைத்தார்கள். அதுவும் கொஞ்ச நேரத்தில் சரியாகச் செயல்படவில்லை. கி.வா.ஜ உடனே, "இம்மைக்கும் சரியில்லை, அம்மைக்கும் சரியில்லை" எனப் பேசவிருந்த தலைப்பிற்கு ஏற்றவாறு சிலேடையில் சொல்ல அனைவரும் ரசித்தனர்.

வாயிலில் போடுவேன்..!

கி.வா.ஜ. விடம் ஒருவர், "சாப்பிட்ட பிறகு வெற்றிலை போடும் பழக்கம் தங்களுக்கு உண்டா?" என்று கேட்டார். அதற்கு, "ஓ...! உண்டே...! ஆனால் வெற்றிலையை வாயில் போட மாட்டேன். வாயிலில் போடுவேன்" என்றார். அங்கிருந்த அனைவரும் அவர் சொன்னது தெரியாமல் விழித்தனர்.

கி.வா.ஜ., "சாப்பிட்ட பிறகு வெற்றிலையை – அதாவது, வெறும் இலையை வாயிலில் உள்ள குப்பைத் தொட்டியில் தானே போட வேண்டும்?" என்று கூறி அனைவரையும் சிரிக்க வைத்தார்.

தலைவனைப் பையனாக...?

கி.வா.ஜவை ஒரு ஊரில் நடந்த கூட்டம் ஒன்றிற்கு தலைமை தாங்க அழைத்திருந்தனர். கி.வா.ஜ அவர்கள் சிறப்பாக கூட்டத்தை நடத்திக் கொடுத்தார். கூட்டம் முடிந்த பின் கொஞ்சம் பழங்களையும், பிஸ்கட்டுகளையும் ஒரு பையில் போட்டு அவரிடம் கொடுத்தனர்.

அந்தப் பையைப் பெற்றுக் கொண்ட கி.வா.ஜ அவர்கள் "என்னைத் 'தலைவனாக', தலைமை தாங்க அழைத்துப் பையனாக அனுப்புகிறீர்களே?" என்றார். அவரின் சிலேடை நகைச்சுவையை அனைவரும் ரசித்தனர்.

*Souces : http://www.keetru.com/index.php/2018-01-12-06-00-39/2009-10-06-14-40-17/2009-10-06-*

## நிலம் யாருக்குச் சொந்தம்..?



ஒரு பெரும் செல்வந்தர் தம்மைச் சந்திக்க வந்த வயதான துறவியை அழைத்துப் போய்த் தமக்குச் சொந்தமான வயல், வரப்பு, தோப்புகளைப் பெருமையுடன் காட்டி, "இவ்வளவும் என்னுடையது சுவாமி" என்றார்.

துறவி கேட்டார், "இல்லையே அப்பா! இதே நிலத்தை என்னுடையது என்று ஒருவன் சொன்னானே!" என்றார்.

"அவன் எவன்? எப்போது சொன்னான்?" என்று சீறினான் அந்த செல்வந்தன்.

"ஐம்பது வருடத்திற்கு முன்" என்றார் துறவி.

செல்வந்தன், "அது என் தாத்தா தான். ஐம்பது ஆண்டுகளாக நாங்கள் இந்த நிலத்தை யாருக்கும் விற்கவே இல்லை" என்றான்.

அப்போது துறவி, "இருபது ஆண்டுகளுக்கு முன் வேறொருவர் இது என் நிலம் என்றாரேயப்பா" எனக் கேட்க, "அவர் என் அப்பாவாக இருக்கும்" என்றான் செல்வந்தன்.

"நிலம் என்னுடையது, என்னுடையது என்று என்னிடம் காட்டிய அந்த இருவரும் இப்போது எங்கே இருக்கிறார்கள்?" என்று கேட்ட துறவிக்கு, அதே வயலுக்கிடையில் தெரிந்த இரு மண்டபங்களைக் காட்டி, அந்த மண்டபங்களுக்குக் கீழேதான் அவர்களைப் புதைத்திருக்கிறோம்" என்றான் அந்த செல்வந்தன்.

துறவி சிரித்துக்கொண்டே, "நிலம் இவர்களுக்குச் சொந்தமா? அல்லது, இவர்கள் நிலத்திற்குச் சொந்தமா? என் நிலம், என் சொத்து, என் செல்வம் என்றவர்கள் நிலத்திற்குச் சொந்தமாகி விட்டனர். அவர்கள் இப்போது இல்லை. ஆனால் நிலம் மட்டும் இருக்கிறது. இது என்னுடையது எனக்கூறும் நீயும், ஒருநாள் இந்த நிலத்திற்குள் புதைக்கப்படுவாய். உன் மகன் வந்து இது என்னுடையது என்பான்" என்று கூறி முடித்தார்.

செல்வந்தனோ தன் அறியாமை எண்ணி, வெட்கித் தலை குனிந்தான்.

உலகில் எதுவும் நிலையானது அல்ல. கவுரவம், பணம், சொத்து, பதவி எல்லாம் ஒரு நாள் நம்மை விட்டுச் சென்று விடும். அதனால், அவற்றின் மீது அளவுக்கு மீறி பற்று வைக்கக் கூடாது. மனதிலிருந்து அகந்தையைத் தூக்கி எறிவோம். அன்புடன் எல்லா உயிர்களுக்கும் சேவை செய்வோம். நாம் எல்லோரும் சமம் என்பதை உணர்வோம்.

*Source: https://www.penmai.com/community/threads/%E0%AE%A8%E0%AE%BF%E0%AE%B2%E0%AE%AE%E0*

## இறைவனிடம் கையேந்துங்கள்!



ஒரு நாட்டின் அரசர் மிகவும் பக்தி நிறைந்தவராக இருந்தார். அவர் தினமும் கோவிலுக்குச்சென்று இறைவனைத் தொழுவது வழக்கம். ஒரு நாள் அவர் கோவிலுக்குச்சென்று இறைவனை வழிபடும் போது கோவில் வாசலில் இரண்டு பிச்சைக்காரர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

வலது பக்கம் அமர்ந்திருந்தவன் இறைவனிடம், "இறைவா! நீ இந்த அரசனுக்கு இவ்வளவு கொடுத்திருக்கிறாயே! எனக்கும் கொஞ்சம் கொடேன்!" என்று வேண்டினான்.

இடது பக்கம் அமர்ந்திருந்தவன், வெளியே வந்த அரசனிடம், "ப்ரபு! இந்த ஏழைக்கு இரங்கி ஏதாவது கொடுங்கள்!" என்று கேட்டான். அரசன் அவனை நன்றாகப் பார்த்தார். ஆனால், ஒன்றும் சொல்லாமல் போய்விட்டார்.

அரண்மனைக்குச் சென்றதும், ஒரு பாத்திரம் நிறைய பாலைத் தருவித்தார். அதில் ஒரு தங்க நாணயத்தைப்போட்டார். பின்னர் தன் மந்திரியை அழைத்து, அந்தப் பாத்திரத்தைக் கோவிலில் இடது பக்கம் அமர்ந்திருக்கும் பிச்சைக்காரனிடம் கொடுக்கச் சொன்னார்.

மந்திரியும் அவ்வாறே செய்தார்.

அந்தப் பிச்சைக்காரன் மிகவும் மகிழ்ச்சியுடன் அந்தப் பாலைக் குடித்தான். பாதிக்கு மேல் குடித்ததும் அவனது வயிறு நிரம்பி விட்டது. மீதிப்பாலை வலது பக்கம் அமர்ந்திருந்த பிச்சைக்காரனிடம் கொடுத்து, "இந்தா! நீ இதை எடுத்துக்கொள்! பார்த்தாயா! அரசனிடம் கேட்டால் தான் கிடைக்கும். இறைவனிடம் கேட்டால் எங்கே கிடைக்கும்?" என்றான். மற்ற பிச்சைக்காரன் மீதமிருந்த பால் முழுவதும் குடித்தான். பாத்திரத்தின் அடியில் இருந்த தங்க நாணயத்தையும் எடுத்துக்கொண்டான்.

மறு நாள் அரசன் கோவிலுக்கு வந்த போது இடது பக்கம் அமர்ந்திருந்த பிச்சைக்காரன் மட்டும் இருந்தான். மற்றவனைக் காணவில்லை. அரசன் அவனைப்பற்றி விசாரித்தார். இந்தப் பிச்சைக்காரன் சொன்னான், "ஐயா! அவன் ஒரு முட்டாள்! இறைவனிடம் தான் பிச்சை கேட்க வேண்டும் என்று இருக்கிறான். இறைவனா வந்து கொடுக்கப்போகிறான்? நான் உங்களிடம் கேட்டேன். நீங்கள் எனக்கு நேற்று பால் கொடுத்து அனுப்பினீர்கள். நான் திருப்தியாகக் குடித்து விட்டு, மீந்ததை அவனுக்கும் கொடுத்தேன்" என்றான்.

அரசன் புன்னகைத்துக்கொண்டே சொன்னார், "ஆமாம்! அவனுக்கு இறைவன் தான் கொடுக்கிறான்" என்று.

(மூலக்கதை சம்ஸ்க்ருதம்; தமிழாக்கம் ? ரமாதேவி)

## நன்றியறிதல் பற்றி வள்ளுவர்

- உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால், அது உலகத்தைவிட மிகப் பெரிதாகும்.
- ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை ஆராய்கின்றவர், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.
- ஒருவர் முன்செய்த நன்மையை மறப்பது அறம் அன்று; ஆயின்,அவர் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்து விடுவது அறம் ஆகும்.
- எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டாகும்; ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை.

*Source: http://kuralthiran.com/KuralAthikaaraVilakkam/011SeyNanriArithal.aspx*

# விதியை மதியால் வெல்லலாம்!



ஒரு நகரத்தில் ஒரு சட்டமிருந்தது. அதன்படி யார் வேண்டு மென்றாலும் அந்த நகரத்திற்கு அரசனாக வரமுடியும். ஆனால், அந்தப் பதவி ஐந்தாண்டுகள் மட்டுமே! ஐந்தாண்டு முடிந்த அடுத்த நாளே மன்னனை ஆற்றின் கரைக்கு மறுபுறம் உள்ள காட்டில் விட்டுவிடுவார்கள்.

அந்தக் காட்டில் மனிதர்கள் கிடையாது. வெறும் கொடிய விலங்குகள் மட்டுமே! மன்னன் காட்டிற்குள் நுழைந்தால் போதும்; வனவிலங்குகள் கொன்று தீர்த்துவிடும். இந்த சட்டத்தை யாராலும் மாற்ற இயலாது. இந்த நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டவன் மட்டுமே அரியணையில் அமரப் பொருத்தமானவன். ஆக, மன்னனாக முடிசூட்டிக் கொண்டவனின் தலையெழுத்து, ஐந்தாண்டுகளுக்குப் பின் கட்டாய மரணம்.

இந்தக் கடுமையான சட்டத்துக்கு பயந்தே யாரும் அந்தப் பதவிக்கு ஆசைப்படாமலிருந்ததால் அந்த அரியணை பெரும்பாலும் காலியாகவே இருந்தது. இருப்பினும் ஒரு சிலர் 'எப்படியிருந்தாலும் சாகத்தானே போகிறோம்; மன்னனாகவே மடியலாமே!' என்று பதவி ஏற்பதுண்டு. அதிலும் பாதி மன்னர்கள் இடையிலேயே மாரடைப்பால் மரணமடைவதுமுண்டு.

இப்படி ஒரு மன்னனுக்கு ஐந்து ஆண்டு ஆட்சிக்காலம் முடிந்தது. அன்று ஆற்றின் கரையைக் கடந்து காட்டிற்குச் செல்ல வேண்டும். அவனை வழியனுப்ப நாடே திரண்டிருந்தது.

மன்னன் வந்தான், அவனுடைய சிறப்பான ஆடைகளையும் நகைகளையும் அணிந்து, முடிசூடி, தங்க வாளேந்தி வைரங்கள் மின்ன மக்கள் முன் நின்றான். மக்கள் வாயைப் பிளந்தனர் "இன்னும் அரை மணிநேரத்தில் சாகப் போகிறான்; அதற்கு இவ்வளவு அலங்காரமா!"

தான் செல்லவிருந்த படகைப் பார்த்துவிட்டு சினத்துடன் கூறினான், "மன்னன் செல்லும் படகா இது! பெரிய படகைக் கொண்டு வாருங்கள்! நான் நின்றுகொண்டா செல்வது! சிம்மாசனத்தைக் கொண்டு வாருங்கள்!"

கட்டளைகள் பறந்தன; காரியங்கள் நடந்தன! சற்று நேரத்தில் அலங்கரிக்கப்பட்ட அழகான படகு ஆற்று நீரைக் கிழித்துக் கொண்டு மறுகரை நோக்கிப் பயணித்தது.

மக்கள் திகைத்து நிற்க, மன்னன் கையசைக்க பயணம் தொடர்ந்தது.

மிகவும் அதிர்ச்சியடைந்தவன் படகோட்டியே! காரணம், இதுவரை அவன் மறுகரைக்கு அழைத்துச் சென்ற எந்த மன்னனும் மகிழ்ச்சியாக சென்றதில்லை. அழுது புலம்பி, புரண்டு, வெம்பிச் செல்வார்கள். இவனோ, மகிழ்ச்சிக் களிப்பில் பொங்கி வழிகிறான்.

படகோட்டி பொறுத்துக்கொள்ள முடியாமல் கேட்டான் "மன்னா! எங்கே செல்கிறீர்கள் தெரியுமா?"

"தெரியும் மறுகரைக்குச் செல்கிறேன்!"

"அங்கே சென்றவர்கள் திரும்ப இந்த நகரத்திற்கு வந்ததில்லை தெரியுமா?"

"தெரியும். நானும் திரும்ப இந்த நகரத்திற்கு வரப் போவதில்லை!"

"பின்னே எப்படி உங்களால் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது?"

"அதுவா! நான் என்ன செய்தேன் தெரியுமா? ஆட்சிக்கு வந்த ஓராண்டு முடிவில் ஆயிரம் வேட்டைக்காரர்களைக் காட்டிற்கு அனுப்பினேன்; அவர்கள் கொடிய விலங்குகளை வேட்டையாடிக் கொன்று விட்டார்கள்!

இரண்டாமாண்டு முடிவில் ஆயிரம் விவசாயிகள் சென்றார்கள்; காட்டைத் திருத்தி உழுதார்கள்; இன்று ஏராளமான தானியங்கள் காய்கறிகள்.

மூன்றாமாண்டு முடிவில் ஆயிரம் கட்டடக்கலை வல்லுநர்கள், தொழிலாளர்கள் சென்றனர். இன்று வீடு, வாசல், அரண்மனை, அந்தப்புரம், சாலைகள் எல்லாம் தயார்!

நான்காம் ஆண்டு முடிவில் ஆயிரம் அரசு அதிகாரிகள் சென்றனர். நிர்வாகம் சீரடைந்தது. இந்த 4000 பேரும் தங்கள் மனைவி, குழந்தைகளுடன் சென்று அங்கே வாழ்கின்றனர்.

இப்போது நான் காட்டிற்குப் போகவில்லை; என்னுடைய நாட்டிற்குப் போகின்றேன்! சாகப் போகவில்லையப்பா, வாழப் போகின்றேன்! அதுவும் மன்னனாக ஆளப்போகிறேன்! உனக்கு ஒருவேளை அரண்மனைப் படகோட்டி வேலை வேண்டுமென்றால், இந்தப் படகோடு இப்படியே வேலைக்கு சேர்ந்து விடு!" என்றான் மன்னன்.

ஒரே ஒரு கேள்வியை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

மன்னனின் வெற்றிக்குக் காரணங்கள் யாவை?

பல காரணங்கள் இருந்தாலும் குறிப்பாக இரண்டினைக் கூறலாம்.

ஒன்று : ஐந்து ஆண்டுகளுக்குப் பின் உயிர் வாழவேண்டும்; அதுவும் மன்னனாகவே வாழவேண்டும் என்று முடிவு எடுத்தது.

இரண்டு : அந்த முடிவினை அடைவதற்காக திட்டமிட்டு உழைத்தது!

அந்த மன்னனுடைய வெற்றிக்கு மட்டுமல்ல; நாம் அனைவருமே வெற்றி பெறவேண்டுமென்றால் நமக்குத்தேவை ஒரு இலக்கை நிர்ணயித்தலும் அதற்காக திட்டமிடுதலும், திட்டமிட்ட பின் வெற்றி பெறும்வரை கடுமையாகவும் புத்திசாலித்தனமாக உழைப்பதுமே.

இப்போது நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதுதான் உங்கள் எதிர்காலம்!

இப்போது ஒருவன் கடுமையாக உழைக்கிறானே, அதுதான் அவனுடைய வருமானமாகப் பின்னால் வரும்!

இப்போது ஆழ்ந்து படிக்கும் மாணவனுக்கு அதுதான் தேர்ச்சி என்று ஒரு எதிர்காலத்தைக் கொண்டுவரும்.

அப்படிப் பார்த்தால் இப்போது நாம் செய்வது, செய்து கொண்டிருப்பதுதான் நம் நாளைய வாழ்வைத் தீர்மானிக்கிறது. அவை ஒவ்வொன்றையும் திட்டமிட்டு சிறப்பாகச் செய்தால் நம் வாழ்க்கை எவ்வளவு மேன்மையாக அமையும்!

எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன் திட்டமிடுங்கள், அந்தத் திட்டத்தை செயல் படுத்துவதற்கு முன் பலமுறை யோசியுங்கள். நன்றாக இருக்கும் என்று உணர்ந்த பின், அதைச் செயல் படுத்துங்கள். பின் வெற்றி நமக்கே!

*Souces : http://lotsofinspiration.blogspot.com/2010/07/nice-tamil-motivational-story.html*

அளவுக்கு மீறிய பேராசை நல்லதல்ல. ஆசையே இல்லாமல் இருப்பதும் சரியல்ல. நல்ல வழியில் தேவையான செல்வத்தை சம்பாதித்து, நிதானமாக வாழ்க்கையை அனுபவிப்பது தான் நல்லறிவு.
?சுபாஷிதம்

## ‘காவேரி கூக்குரல்’



தென் மாநிலங்களுக்கு உயிர் நாடியான காவேரிக்குப் புத்துயிரூட்ட ‘காவிரி கூக்குரல்’ என்னும் இயக்கம் துவங்கியுள்ள ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள், கர்நாடக மாநிலம் காவிரி உற்பத்தியாகும் தலக்காவேரி முதல் காவிரி கடலில் கலக்கும் பகுதியில் உள்ள திருவாரூர் வழியாக சென்னை வரை, 3,500 கி.மீ., மோட்டார் சைக்கிள் பயணம் மேற்கொண்டார். இதைத் தொடர்ந்து கோவை கொடிசியாவில் காவேரி கூக்குரல் பயணத்தின் நிறைவு விழா 17.09.2019 அன்று நடந்தது.

கோவையைச் சேர்ந்த, 30க்கும் மேற்பட்ட முன்னணி தொழில் அமைப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த விழாவில், அனைவரும் காவேரி கூக்குரல் பதாகைகள் ஏந்தி ஆதரவு தெரிவித்தனர்.

விழாவில், சத்குரு பேசியதாவது: “காவேரி கூக்குரல் திட்டம் மூலம் நடப்படும், 242 கோடி மரங்கள், 10 ஆண்டுகளில் வளரும் பட்சத்தில் காவேரி பெருக்கெடுத்து ஓடும். நம் நாட்டில் உள்ள 130 கோடி மக்கள் தொகையில், ஒருவர் இரண்டு மரங்கள் நட்டால் போதுமானது. நாம் எதைச் செய்யமுடியுமோ அதைச் செய்யவில்லையேல், நமது வாழ்க்கை பேரழிவுகளைச் சந்திக்கும்”.

பாரதிய வித்யா பவன் தலைவர் கிருஷ்ணராஜ் வாணவராயர் பேசியதாவது: ‘வித்தியாசமாக சிந்திப்பதுடன், துணிச்சலாக செயல்பட்டு காலமாற்றத்துக்கும் காரணமாக சிலர் இருக்கின்றனர். இன்று இயற்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சொல்லி, பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு ஒரு சத்குரு தேவைப்பட்டுள்ளார். இவ்வளவு பெரிய திட்டத்தை நம்மால் கற்பனை கூட செய்ய முடியாது. இவரால் எளிதாகச் செய்ய முடிகிறது’.

கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கிருஷ்ணன், கங்கா மருத்துவமனை இயக்குனர் ராஜசேகர், கொடிசியா தலைவர் ராமமூர்த்தி, கொ.ம.தே.க., ஈஸ்வரன் உட்பட பலர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

*Source: https://www.dinamalar.com/news_detail.asp?id=2369345*




## ஞானத்தை எங்கும் தேடாதே!!!

ஒரு பெரிய பணக்காரன் தன் பெரிய மாளிகையில் தன் மனைவி, குழந்தைகளுடன் எந்த ஒரு குறையுமின்றி சந்தோஷமாக வாழ்ந்து வந்தான். ஒரு நாள் அவன் மனம் மிகவும் நிம்மதியிழந்து இருந்தது. அதனால் அவன் ஞானத்தைத் தேடிப் புறப்பட்டான். அவ்வாறு புறப்படும் போது, எவராயினும் நடந்து தான் செல்வார்கள். ஆனால் இவன் பெரிய பணக்காரன் என்பதால், தன் குதிரையில் பல ஊர்களுக்கு சென்று பல துறவிகள், ஞானிகள் மற்றும் குருக்களை சந்தித்து, அவர்கள் கால்களில் தங்கத்தையும், வைரத்தையும் வைத்து, தனக்கு ஞானம் தருமாறு வேண்டினான். இருப்பினும் அவர்களால் அவனுக்கு ஞானத்தைத் தரமுடியவில்லை.

அப்போது அந்த வழியாக வந்த ஒருவர் அவனிடம், ‘இந்த காட்டின் உட்பகுதியில் ஒரு குகையில் ஜென் மாஸ்டர் வாழ்ந்து வருகிறார். அவரிடம் நீங்கள் சென்று உங்கள் பிரச்சினையைச் சொன்னால், அவர் கண்டிப்பாகத் தீர்த்து வைப்பார்’ என்று கூறினார். அவனும், அவன் கூறியதைக் கேட்டு, ஒரு மூட்டை நிறைய பணத்தை எடுத்துக் கொண்டு, அந்தக் காட்டின் உட்பகுதியில் உள்ள அந்த மாஸ்டரைத் தேடிச் சென்றான். எப்படியோ நீண்ட நாள் அலைச்சலுக்குப் பிறகு, அந்த மாஸ்டரின் குகையைக் கண்டுப்பிடித்து, அவரை வணங்கித் தன் பிரச்சினையைக் கூறினான்.

பின் அந்த மாஸ்டர் அவனிடம், “நீ இங்கே எப்படி வந்தாய்?” என்று கேட்டார். அதற்கு அவன் “குதிரையில்!” என்றான். பின் அவர் “அப்படி யென்றால் எதற்கு ஞானத்தைத் தேடுகிறாய், முதலில் உன் குதிரையைத் தேடு!” என்று கூறினார். உடனே அவன் அவரிடம், “என்னிடம் தான் குதிரை இருக்கிறதே, பின் எதற்கு நான் அதைத் தேட வேண்டும்?” என்று கேட்டான்.

பிறகு குரு சொன்னார், “எப்படி உன்னிடம் குதிரை இருக்கிறதோ, அதேபோல் தான் ஞானமும், உன்னிடமே இருக்கிறது. ஆகவே, அதைத் தேடி வெளியே செல்லாமல், உனக்குள்ளேயே தேடித் தெரிந்துக்கொள்” என்று கூறி, குகைக்குள் சென்று தியானம் செய்ய, ஆரம்பித்துவிட்டார்.

*Sources : https://tamil.boldsky.com/inspiration/short-story/don-t-seek-knowledge-anywhere-002100.html*

Book-Post

To

We welcome suggestions and contributions from the readers for improving the quality and content of the bulletin.

**B.K. Krishnaraj Vanavarayar, Chairman, Bharatiya Vidya Bhavan, 582, D.B. Road, R.S. Puram Coimbatore - 641 002. Telephone : 2542481 E-mail : kendra@bvbcbe.in**